புதுச்சேரி அரசு
வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை
புதுச்சேரி மாவட்ட பேரிடர் மேலாண்மை ஆணையம்

புதுச்சேரி, நாள் 29.10.2025

## செய்திக் குறிப்பு

வடகிழக்குப் பருவமழை துவங்கியதை தொடர்ந்து, புதுச்சேரி மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் தற்போது தொடர்ந்து மழை பெய்து கொண்டு வருகிறது. சாத்தனூர் மற்றும் வீடூர் அணைகளின் நீர் பிடிப்பு பகுதிகளில் பெய்து வரும் மழையினால், அவ்வப்போது நீர் திறந்து விடப்பட்டு வருகிறது. அவ்வாறு திறந்து விடப்படும் ஒவ்வொரு நேர்விலும் இந்த மாவட்ட நிர்வாகம், பொது மக்களின் பாதுகாப்பு குறித்து, பல்வேறு செய்தி அறிக்கை மற்றும் அறிவுரைகள் வழங்கி வருகிறது. இருப்பினும், 28.10.2025 அன்று, இவை அனைத்தையும் லட்சியம் செய்யாமல், தமது பாதுகாப்பு மற்றும் குடும்ப உறுப்பினர்களின் நிலை பற்றியும் கவலை கொள்ளாமல், அணை படுகைகளில் குளிப்பது, நீந்துவது, செல்ஃபீ எடுப்பது உள்ளிட்ட கேளிக்கை நடவடிக்கைகளில் ஈடுப்பட்டு வருவது சமூக ஊடங்கங்கள் மூலமாக தெரிய வந்துள்ளது.

எனவே, மாவட்ட நிர்வாகமானது சுத்துக்கேணி, கைக்கலப்பட்டு, சோரியாங்குப்பம் மற்றும் இதர பகுதிகளில் குளிப்பது, நீந்துவது, செல்ஃபீ எடுப்பது, மீன் பிடிப்பது, நடப்பது, உள்ளிட்ட அனைத்து விதமான கேளிக்கை நடவடிக்கைகளையும் பேரிடர் மேலாண்மை சட்டத்தின் கீழ் தடை செய்து ஆணைப் பிறப்பித்துள்ளார். தடையாணையை மீறுபவர்கள் மீது, பேரிடர் மேலாண்மை சட்டப் பிரிவுகள் 51, 55, 56 இன் கீழ் சட்டமுறைப்படியான நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பொதுமக்கள் பேரிடர் தொடர்பான தங்களது புகார்களுக்கு இலவச அழைப்பு எண்களான 1077, 1070, 112 அல்லது 9488981070 என்கிற எண்ணில் வாட்சப் தகவல் ஆகியவற்றின் வழியாக தெரிவிக்கலாம்.

குலோத்துங்கன். அ, இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சியர் மற்றும் தலைவர்,
புதுச்சேரி மாவட்ட
பேரிடர் மேலாண்மை ஆணையம்